# அமெரிக்க காங்கிரஸின் கூட்டு அமர்வில் பிரதமரின் உரை

ஜூன் 23, 2023

பிரதம மந்திரி திரு நரேந்திர மோடி 22 ஜூன் 2023 அன்று அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் திரு. கெவின் மெக்கார்த்தியின் அழைப்பின் பேரில் அமெரிக்க காங்கிரஸின் கூட்டு அமர்வில் உரையாற்றினார்; திரு சார்லஸ் ஷுமர், செனட் பெரும்பான்மைத் தலைவர்; திரு. மிட்ச் மெக்கானெல், செனட் குடியரசுத் தலைவர்; மற்றும் திரு. ஹக்கீம் ஜெப்ரிஸ், மன்றத்தின் ஜனநாயக தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்

2. இந்நிகழ்ச்சியில் அமெரிக்க துணைத் தலைவர் செல்வி கமலா ஹாரிஸ் அவர்களும் கலந்து கொண்டார்.

3. கேபிடல் ஹில் வந்தடைந்த பிறகு, பிரதமருக்கு காங்கிரஸ் தலைவர்கள் முறைப்படி வரவேற்பு அளித்தனர். அதன்பிறகு, சபாநாயகர் கெவின் மெக்கார்த்தி மற்றும் காங்கிரஸ் தலைவர்களை பிரதமர் தனித்தனியாக சந்தித்து பேசினார்.

4. பிரதமர் தனது உரையில், இந்தியா-அமெரிக்க உறவுகளை ஆழப்படுத்த அமெரிக்க காங்கிரஸில் நீண்டகால மற்றும் வலுவான இரு கட்சி ஆதரவுக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

5. இந்தியா-அமெரிக்க இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள விரைவான முன்னேற்றங்கள் குறித்துப் பேசிய பிரதமர், இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான தனது பார்வையைப் பகிர்ந்து கொண்டார். இந்தியா அடைந்துள்ள மகத்தான முன்னேற்றம் மற்றும் அது உலகிற்கு அளிக்கும் வாய்ப்புகளையும் அவர் கோடிட்டுக் காட்டினார்.

6. பிரதமரை கவுரவிக்கும் வகையில் சபாநாயகர் மெக்கார்த்தி வரவேற்பு அளித்தார்.

7. அமெரிக்க காங்கிரஸின் கூட்டு அமர்வில் பிரதமரின் இரண்டாவது உரை இதுவாகும். முன்னதாக அவர் செப்டம்பர் 2016 இல் அமெரிக்காவிற்கு தனது அதிகாரப்பூர்வ பயணத்தின் போது அமெரிக்க காங்கிரஸில் உரையாற்றினார்.

**வாஷிங்டன் டிசி**
**ஜூன் 22, 2023**